

# அன்றைய
# போட்டி

எஸ்.ஜெகதீசன்

உ

# அன்றைய போட்டி!

எஸ்.ஜெகதீசன்

கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின்
வான் பரப்பை வசீகரித்தவை.

புத்திசாலிகளுக்குரிய ஓய்வு நேரத்துக்கான
கேள்வி - பதில்கள்!

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

# அன்றைய போட்டி!

## எஸ்.ஜெகதீசன்




இலவசமாக இந் நூலின் மின் பதிப்பை பெற்றுக் கொள்ள விரும்புவோர் S.Jegatheesan14@gmail.com என்ற மின் முகவரியில் தொடர்பு கொண்டால் அனுப்பி வைக்கப்படும்.

வெளியீடு: 24.05.2021 விக்ரோரியா தினம் கனடா.

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா



சாயிப்பிரியன்

## திரு.க.துளசிகாமணி

தமிழ் அறிஞர் -மூத்த எழுத்தாளர்

# அணிந்துரை

அணிந்துரை ஓரணியாய் இன்சுவையாய் உண்மைப்
பணிந்துரையாய் பார்த்தோர் படித்தோர் - துணிந்துரை
ஆற்றிட ; நன்மைதீமை அத்தனையும் நோக்கி மனம்
தேற்றிக்கூற் றாய்தருவர் தீர்ப்பு

அறிந்து அணிந்து உரைத்தலே சாலச் சிறந்தது.

ஈங்கு பொதிகை என்ற புத்தணிக்கு - அணி செய்து
அணிபார்க்கும் துணிவு வருமா!

அணிக்கு முன் இமயமும் அமைதியுறும்.

நண்பர் இத்துறையில் மிக வல்லவர். சொற் செல்வர்.
அவர் பெற்ற அனுபவம் எமக்கு சுகானுபவம் தரும்.
ஒரு சுரன்! சூரியன்.

எத்தனை பத்திரிகைகள் அவர் அணைப்பில் இணைந்து மகிழ்ந்து படிப்பவர்களை துடிப்புடன் இயங்கச் செய்தன.

என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற வாக்கிற்கு இணங்க தூய மனதுடன் நேய உணர்வுடன் யாவருடனும் சுத்தமாய் சித்தம் நிறைந்து செயல்படும் கர்ம வீரர்.

'யார் இந்தச் செந்தாரகை? ' என்று பல ஆண்டுகளாக அறிந்து உணர எத்தனை தேடல்கள்!

என் மனைவி சொல்லியது போல் - "நான் கொடுத்து வைத்தவன்தான்".

இப்படி ஒரு நண்பனை பொதிகை ஜெகதீசனை நல்ல உற்ற நண்பனாகக் கொடுத்து வைத்தவன்.

ஜெகதீசன் அவர்கள் எம் இருவர் பற்றி எழுதிய வரிகள் -

"சாயி மீது அவர் வாழும் வரை வைத்திருந்தது அளப்பரிய பக்தி!" "சாயிப்பிரியன் மீது அவர் சாகும் வரை கொண்டிருந்தது அபரிமிதமான காதல்!"

இவ்வரிகள் எம்மை நன்கு புரிந்து பதித்த சொற்கள்.

அவர் தேவைக்காக உறவை நட்பை ஏற்படுத்துபவர் அல்ல! சேவைக்காக பிறருக்கு உதவ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கிற்காக நட்பில் நாட்டம் மிகுந்தவர்.எதுவித எதிர்பார்ப்பும் இல்லாத சொற்செல்வர்.

பழகப் பழக இனிக்கும் சுவைக்கும் நற்பழம் அவர்! இந்தக் கிழவரை நன்று சுவைத்து மகிழ்பவர். உள்ளம் நெகிழ்பவர்.

இது கொறனா காலம்! இவர் பழக்கம் எமக்கு நன்று உதவும். கொதி நீர்- வெந் நீர் குடிக்கத் தேவையில்லை.சில வேளைகளில் அவர் பேச்சில் கொதி நீர் கொதித்து பொங்கி எழும்! கொதிக்கும்! தகிக்கும்! தணியும்! ஈற்றில் சிரித்து மகிழ வைக்கும்!

எத்தனை புனை பெயர்கள்! 'திருட்டுப்பூனை' பெயர்கள் அல்ல.

எத்தனை பாராட்டுரைகள்? எத்தனை அன்பு உறவுகள்? எத்தனை பண்பு நிகழ்வுகள்! புனை பெயர்கள் போல் - அத்தனையும் பற்பல!

அமரர் இல்லற ஞானி ஆ.சோமசுந்தரம் ஐயா - எம் மூவரையும் நன்கு வாழ்த்தியவர்!

கவிதை பூக்கும் நந்தவனம் திரு கந்தவனம் ஐயா - இவரைப்பற்றி நன்கு எழுதியவர்.

திருமதி பரா.சுந்தரலிங்கம் - எவர் எழுத்துக்களையும் படிப்பதில் - பதில் அனுப்புவதில் ஆர்வம் மிக்கவர். அவர் விமர்சனத்தில் விசனம் இருக்காது.அபிமானம் இருக்கும்.

அமரர் டொமினிக் ஜீவா ஒரு படைப்பை - என் வெண்பாக்களைக் கூட - 'நகாஷ்' செய்து துடிப்புறச் செய்வதில் தீரர்! சூரர்! ரொம்ப அற்புதமான மனித நேயமிக்க புனித தோழர்.

அவரைப் போன்றே என் வெண்பாக்களை - தண்பாக்களை - தன் பாக்கள் போன்றே சில எழுத்துக்களை இடம் மாற்றி இலக்கணம் தவறாது எளிமைப்படுத்தி பெருமைப் படுத்துவார் ஜெகதீசன்.

அவர் செய்யச் சொல்லார். ஆனாலும் என்னால் அதைச் செய்யாது தட்டிக் கழிக்க இயலாது!

அவ்வளவும் பொருத்தம். அவரின் அந்தத் திருத்தம்!

- இடம் மாற்றம் பார்த்து 'சூள்' கொட்டுவேன்!

அவருக்கு 'கோள்' தெரியாது. கோள்களை விலக்க - கோள்களே வியக்க - கோயில் கோயிலாக குனிந்து பணிந்து மனம் கனிந்து எழும்புவார்.

படைப்பாளியின் ஒவ்வொரு சொல்லும் அவன் குழந்தைகள். பெற்ற குழந்தைகளிலும் பார்க்க அவன் நெஞ்சில் உணர்வாகி மனதில் உருவாகி விரல்களால் உருப்பெற்றவை. காலம் பூராவும் சிரஞ்சீவியாக படைத்தவனைப் பற்றி பேசிப்பேசி அவன் நறுமணத்தை பெரும் பேறாக பரப்பியவாறு இருப்பவை. படைப்பாளி ஒரு நல்ல கொடையாளி! படைத்தவை - விடை அள்ளிக் கொடுத்தபடியே இருக்கும்.

புத்தக வடிவில் அச் சிரஞ்சீவிகளுக்கு புதிய அகம் கொடுத்த சொற்செல்வன் பொதிகை ஜெகதீசன் என்றென்றும் போற்றுதற்கு உரியவர்.

தன்னந் தனியே என் படைப்பை காலத்தில் பதித்து புத்தகமாகத் தந்து -என்னை - எம்மை - புளகாங்கிதம் அடையச் செய்த நல்ல இதய சொற்-பொற் செல்வன்!

பணம் இவர் கைக்குப் போகப் பயப்படும். ஆயிரக் கணக்கு வெறும் நூறுக் கணக்காய் குறைந்து நிறைந்த பயனைத் தரும்.

ஒன்றையும் எதிர்பார்க்காதவர். என்றும் எதிர்ப்பும் இல்லாதவர்.

அவருக்கு - பிடித்தவர்களைப் புகழத் தெரியும். புளுகத் தெரியாது.புகழ் - பூத்து மணம் பரப்பும்! நாசி சுவாசித்து இமைகள் மூடி ஆழ்ந்து அமைதியுற்று ஆனந்தத்தில் ஆழ்த்தும். புளுகு - புழுவாய் நெளிந்து நசிந்து அழுகி நாறி மூக்கைப் பொத்த வைக்கும்.

காலம் நகர நகர விருப்புக் கூட்டம் விரிந்து பெருகும். வெறுப்புக் கூட்டம் சுருங்கி நொருங்கி சிதைந்து போகும்.

றோசெஸ்டர் அம்மன் தரிசனத்துக்கு - நான் சொற் செல்வன் ஜெகதீசன் சொல்லழகன் கலாராஜன் -என நாம் மூவரும் பயணித்தோம்.

நாம் மூவர்! வாகனம் எமது உலகம்! யாவும் மறந்து பயணம்! எம்மை மறந்து யாவும் சுதந்திரமாய் பேசினோம்! இலட்சியம் - இலக்கியம்!

தேவாரங்கள்-பாவாரங்கள்-சிறுகதைகள்-தொடர் கதைகள் - கருத்துரைகள் - **CTBC** நிகழ்ச்சிகள் பற்றிய அலசல்-பேட்டிகள் - போட்டிகள்- இலக்கியத்தில் உள்ள எமக்குத் தெரிந்த அத்தனையும் தொட்டோம்!

றோசெஸ்டர் ராஜராஜேஸ்வரி அம்மன் மீது மிகுந்த பக்தியுடன் யான் யாத்த பதிகத்தை பக்தியுடன் பாடிப் பரவசித்தேன்.

சொல்லழகன் சொற் செல்வன் என் இரு பக்கத் தோள்களாக இருக்க எனக்கு ஏது சொற் பஞ்சம்! கோவிலிலும் ஏது சோற்று பஞ்சம்!அன்று முழுவதிலும் அவ்விருவர் தோளில் நான் தஞ்சம்!

என் கால்கள் வீங்குகின்றன என்பதைச் சொல்லி முடிக்கு முன்பே என் கரங்கள் அவர்கள் தோள்களில்! ஊஞ்சலில் ஆடும் உணர்வு.அதற்கு முன் நிறைந்தது நல் உணவு.

ஈற்றில் ஒன்றாகத் திரும்பும் போது ஒருவரை ஒருவர் தேடினோம் - எமக்குள் எம்மை வைத்துக்கொண்டு!

- எமக்கு வெளியே தேடுவதன் அறியாமையை உணர்ந்து - நினைத்து-அசந்து-மகிழ்ந்து-சிரித்து-நெகிழ்ந்தோம்.

மூவரும் மூன்று கோணம். பின்பு திரு கோணம்.பின்பு ஒரே ஒரு குணம். அதுவே எம் பலம்.

பக்தி பூத்தது. கவிதை பிறந்தது.

இந் நாள் ஏன் என்றும் இப்படி இருக்கக் கூடாது! - அவ்வளவு இன்பம்!

இக் கோயிலுக்கு எம்முடன் உறவாடிய மூத்தோர்களுடன் மீண்டும் பயணிக்கும் ஆவலுடன் திரும்பி வந்து இருக்கிறோம்.

மூவரும் கொதியர்கள்தான்.கொதியிலும் எம் உறவின் சுதி என்றும் கலைந்ததில்லை. குலைந்ததில்லை. நாளுக்கு நாள் நிலை பெற்று நீண்டு கொண்டிருக்கின்றது.

எமக்குள் எதுவித எதிர்பார்ப்புமில்லை! எதிர்ப்பு இல்லா உவகை காணும் ஒரே உணர்வுதான் இருந்தது. இருக்கின்றது. இனியும் இருக்கும்.

**CTBC**யின் காலம் எம் மூவர்க்கும் பொற்காலம். நற்காலம்.

கருத்து வேற்றுமை தோன்றும். பின் மறையும். அன்பு உணர்வு- உறவு-யாவற்றையும் துறக்க வைத்து இன்பத்தில் ஆழ்த்தும்.

எதையும் இலக்கியமாக நோக்கி நல்ல இலட்சியத்தில் மூழ்குவோம்

இரு விழிதான் - வழி ஒன்று!

நாம் யாவரும் ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு அணிகள்.

அணிகலம் அலங்காரம் அழகு கோலம் கூட்டம் பெருமை ஒழுங்கு. அழகு மிகு அணி. நற் பணி செய்வோருக்கு இல்லை பிறவிப் பிணி.

அணிந்துரையை பாயிரம் என்பர் படித்தவர்.

பாரமாக இருக்கக் கூடாது. நல்ல சாரமாக -பூச்சரமாக அமைய வேண்டும்.

படியுங்கள்.

போட்டியில் - அக் காலத்தில் புகுத்திய புதுமையைப் பாருங்கள்!

தனி மனித மூளையை - பக்குவமாகப் பயன்படுத்த - அவர் காட்டிய சாதுரியம் வியக்க வைக்கும்!
அவர் படைப்பில் - தெரிந்த சுவை - தெரியாத சுவை - புரியாததையும் புரிய வைக்கும் - புத்துணர்வு ஊட்டும்.
சக்தியை கவனித்தால் - அதன் கனம் மனதிற்கு மகிழ்வு ஊட்டும்.

மதித் திறனை மனது துதிக்கும்!

பஞ்சாமிர்தமாக -துளித்துளியாக - பருகுங்கள்!

உச்சி தொட்டு உள்ளங்கால் வரை உணர்வு சிலிர்க்கும்!
மனம் களிக்கும்!

சொற் செல்வன் சொற் செல்வம் நிறைந்த அற்புதன்!

பழகிப் பாருங்கள்! படித்துப் பாருங்கள்! சுவைத்துக் களியுங்கள்!

ஓம் ஸ்ரீ சாய் ராம்!

~ x ~



இளையபாரதி

## திரு.க.சிவசோதி

இயக்குனர் கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

# வாழ்த்துரை

அன்புக்கு இனிய அனைவர்க்கும் வணக்கம்

அண்ணர் ஜெகதீசன் அவர்களைப்பற்றி எழுத
ஆயிரம் இருக்கு!

அதற்கு ஆயத்தம் எதற்கு?

ஏறக்குறைய ஒரு கால் நூற்றாண்டு காலம் அறிவேன்.

வெளித்தோற்றத்தாலும் சரி உள் உருவத்தாலும் சரி யாரும் அவரை அணுக முடியாது.

அவ்வளவு பிரியமான மனிதர்.

நேர்மையாக வெளிப்படையாக அதுவும் மிக மென்மையாக ஒருவரின் சரி பிழைகளை மிக்க நேர்த்தியாக எழுதும் - சொல்லும் துணிவு உள்ளவர்.

கடந்த எனது கனேடிய ஒலிபரப்பு வாழ்க்கையில் ஒரு நண்பராக ஆசானாக விமர்சகராக பல் வேறு பாத்திரங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

அவருடைய எழுத்தை நீண்ட காலமாக வானலையில் வாசித்து இருக்கின்றேன்.

ஓர் ஒலிபரப்பாளனின் குரல் ஆற்றலையும் குணாதிசயங்களையும் புரிந்து வார்த்தைகளை பிரசவிக்கும் அவரது எழுதுகோல் எதுகை மோனைகளை அடுக்கடுக்காய் பிறப்பிக்கும்.

ஒத்திகை இல்லாமல் அவர் எழுதும் எதனையும் வாசிக்க முடியாது.

ஒரு முறை வாசித்தால் ஓர் அர்த்தமும் இரு முறை வாசித்தால் இரு அர்த்தங்களும் பல முறை வாசித்தால் பல அர்த்தங்களும் தருகின்ற அவரின் தமிழ் கண்டு நான் வியந்திருக்கிறேன். நேயர்கள் ஆச்சரியப்பட்டு தடுமாறி இருக்கின்றார்கள்.

ஜெகதீசன் அவர்கள் பத்திரிகை மற்றும் சஞ்சிகை என்று வரும்போது ஓர் எழுத்தும் வானொலி என வரும்போது வேறு எழுத்தும் வைத்திருக்கிறார்.

வாசிப்பவர்களுக்கு நேரிடையாக ஓர் உணர்வும் வானொலி வாசிப்புக்கு வேறு ஒரு பரிமாணமும் தரும் வியப்பும் அவர் எழுத்தில் இருக்கும்.

இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் ஆசிரியர் நல்ல வாசகர் என அவர் கடந்து வந்த பாதைகள் எல்லாமே வாசிப்பவர் களுக்கும் அவர் சார்ந்த ஊடக நிறுவனங்களுக்கும் பெரும் பாக்கியமாக அமைந்திருந்தது என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.

எழுத்துலகை கடந்து அவரின் தனிப்பட்ட வாழ்வு தன்னிறைவு கண்ட வாழ்வு.

பேசுவதற்கு இனிமையும் கேட்பதற்குச் சுவையும் உடைய அவரின் செயற்பாடுகளும் குணங்களும் வியக்கத்தக்கவை.

யாருடைய மனமும் வேதனைப்படாமல் அவர் நடக்கும் வாழ்க்கை நெறி அவருக்கே உரித்தானது.

எதற்கும் ஆசைப்படாத பொறாமையில்லாத வாழ்வு அவருடையது.

கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காற்றலையில் அவர் பெயரை தவிர்த்து விட முடியாது.

இந்த உரையை எழுதும் பொழுது வஞ்சகமில்லாத காருண்யமான அவர் முகமே என் எழுத்தில் பதிவாகி இன்னும் இன்னும் எழுது இவரை என ஏங்க வைக்கின்றது.

இன்னும் எழுத எவ்வளவோ இருக்கு.



## திருமதி கமலா சந்திரன்


தலைவி வானலை மன்றம்
கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்


# அறிமுகவுரை

உள்ளத்தில் உறைந்துள்ள ஒளியான ஆதவனுக்கு அறிமுகமா?

இவர் அறிவின் ஆதவன்!

அறிவொளி வீசும் அற்புதக் கலைஞன். பொதிகைத் தமிழ் ஊற்று.

பொன்னம்பலத்து ஜெகதீசன் இவர் தேன் தமிழ் தெவிட்டாத பேர் அமுது.

எண்ணக் களஞ்சியம் அதை வண்ணக் களஞ்சியமாக மீட்டும் வல்லவன்.

*நற் சிந்தனையையும் சீரிய தகவல்களையும் அன்பு மொழியில் வாரி வழங்கும் வள்ளல்.*

*கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன காற்றலை வளாகத்தில் வலம் வந்து எங்கள் சுவாசத்தோடு சங்கமித்து வரும் வருணன். வித்தகமான உத்தமன் ஆனவர்.*

*வான் அலை ஊடாக எண்ணச் சிறகடித்து எம்மை சிறை பிடித்த தீன் தமிழ் சீலன்.*

*2001 ம் ஆண்டு 'அப்பே றட்ட' நிகழ்ச்சிக்குச் சமூகமளித்த போது - அங்கு தென்பாங்கு குரலாய் ஒருத்தர் என் பெயர் சொல்லி அழைத்திட - யான் வியந்தேன் யாரென?*

*என்ன ஆச்சரியம்!*

*எம் சிந்தையில் நிறைந்த கலச நாயகன் பாஞ்சாலன் என்றறிந்ததும் அதிசயமான அளவு கடந்த ஆச்சரியமடைந்தேன்.*

*உங்களுக்குத் தெரியுமா?*

*இந்த ஜெயமான ஜெகதீசன் எங்கள் **CTBC** யில் பாஞ்சாலனாய் திகழ்ந்து தெள்ளுத் தமிழ் வித்தகனாய் மிளிர்ந்தவர்.*

*அன்று காற்றலை ஊடாக உலகெங்கும் தங்கத்தமிழில் புகழ் பரப்பும் வானொலியாம் கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டத்தாபனத்தின் போட்டி நிகழ்ச்சிகளுக்கு புதிய பரிமாணம் தந்தவர்.*

இவர் -

மூத்த மேதகையான படைப்பாளி.

கலைத்துறையின் களஞ்சியம்.

பத்திரிகைத் துறையில் மிக நல்ல அனுபவம் கொண்டவர்.

பலவிதமான  தகவல் தரும் ஜாம்பவானாக திகழும் சாதகன்.

புன்னகையையே மொழியாகக் கொண்ட உன்னத ஜீவன்.

ஈழத்தில் இருந்து இங்கிலாந்து நோர்வே நாடுகளில் அவர் வாழ்ந்த வேளையில் உலகின் பல பாகங்களிலிருந்தும் வெளிவந்த பத்திரிகைகள் சஞ்சிகைகள் கவர்ந்ததில் கவின் உடன் செயற்படும் பிரமன் ஆனார்.

பற்பல அறிஞர்களை பெரும் கலைஞர்களை பேட்டி கண்டு சரிதங்கள் தந்தவர்.

**CTBC** யில் தனி மனித மூளைக்கான அன்றைய கால போட்டிகளில் பாஞ்சாலன் நுட்பமாக நூதனமாக நல் நெறியுடன் நேர்மையாக செயற்பட்டவர்.

வானலை கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவல்லவர் திரு. இளையபாரதி. சிறந்த கலைஞர்.நிறைந்த சேவையாளர்.

தேவை அறிந்து மக்கள் விருப்பம் உணர்ந்து நிகழ்ச்சிகளை தந்து தனக்குத் தானே தலைவனாய் இன்று வரை கனடாவில் பேரும் புகழுடன் திகழ்பவர்.

இலக்கியம் உண்டு.கலையரங்கு உண்டு. பேச்சு சுதந்திரம் உண்டு.தமிழிற்குத் தொண்டு இப்படிப் பலப்பல.

போட்டி நிகழ்ச்சிகளை மிகத் திறமையாகச் செயற்படுத்த அவர் தேர்ந்தெடுத்த கலைஞர் - பாஞ்சாலன்.

போட்டிகளால் பங்குபற்றுபவர்களை பயப்படுத்தச் செய்வார். பயன் படுத்தி பங்கு ஆற்றுவோரையும் நடத்துபவர்களையும் மேலும் இணைத்து பிணைத்து அணைத்து இன்புறச் செய்வதில் இணையற்றவர் திரு.பாஞ்சாலன்.

இயன்ற வரை எவருக்கும் தயங்காது உதவி செய்யும் மனப்பான்மை கொண்டு செயற்படும் திலகம்.

1996 ம் ஆண்டு அரும்பி குன்றாய் தோன்றிய குறுக்கெழுத்துப் போட்டி சீலமாய் சின்னச் சின்ன கதைகளுடன் குழைந்து வந்தது செழிப்புடன்.

கலசம் அதனை கடைந்து உலகின் மிகச் சிறிய குறுக்கெழுத்துப் போட்டி என கணிசமாய் மிளிர வைத்த வித்தகம் மெத்தகமே!

தங்கத் தமிழ் சங்கத்தமிழாய் தெவிட்டியது.

பஞ்சாலாத்தியும் பன்முக ஒளியுடன் சுடர்ந்தது.

இத்தகைய எத்தனை எத்தனையோ அமளியான ஏற்றம் மிகு ஆக்கங்களை நிறைவாக தந்திட்ட அமுதன் ஆனார்.

திரு.ஜெகதீசனின் பொதிகைத் தமிழ் நடை - மொழியில் இனிப்பது சிந்தையில் ருசிப்பது.

அவர் தரும் தகவல்கள் ஆய்வுகள் படைப்புகள் அனைத்துமே அழகின் பெட்டகங்கள்.

அறிவின் சிகரங்கள்.

உணர்வின் உச்சங்கள்.

உலகம் உயர உன்னத உந்து சக்திகள்.

ஜெகதீசன் அவர்கள் மேன் மேலும் சேவைதனை வழங்கிப் பல்லாண்டு வாழ்க என என் இதயத்தால் இறைவனை வணங்கி வேண்டிக் கொள்கின்றேன்.

வாழ்க பொதிகைத் தமிழ்.

வாழ்க ஜெகதீசன். வாழ்க செழிப்புடன்.

ஆண்டவன் அருளால் எல்லாச் செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ்ந்திடப் பிரார்த்திக்கின்றேன்.



பாஞ்சாலன்

# திரு.எஸ்.ஜெகதீசன்

எழுத்தாளர்-வடிவமைப்பாளர்-வெளியீட்டாளர்

# என்னுரை

நீல் ஆமஸ்ரோங் முதலில் காலடி வைத்த கிரகம் எது?

நிகண்டு திவாகரம் பிங்கலந்தை அபிதான சிந்தாமணி கலைக்களஞ்சியம் அல்லது இணையம் என எதுவுமே அன்றாட பரிச்சயத்தில் இல்லாதிருந்த 'புராதன' காலமொன்றில் அமைந்த அன்றைய போட்டிக் கேள்விகளில் இதுவும் ஒன்று!

எல்லோருக்கும் தெரிந்த சாதாரணமான பதில்தான்!

நிலா என்ற ஊகம் பிழை என்பதும் பூமி என்ற பதிலே சரி என்பதும் புத்தியில் பூப்பூத்த கணத்தில் தெரிந்த பரவசம் - அன்றைய ஒரு துளி சொர்க்கம்!

அதில் சிந்திக்கும் ஆற்றல் மென்மையாக விரிந்தது அல்லது அறிவின் ஆட்சிப் பரப்பு சற்றே வியாபித்தது என்பதுதான் அன்றைய ரம்மியம்.

இப்பொழுதெல்லாம் 'வெளியே இருந்து ஆதரவு கொடுக்கும் அரசியல் வாதிகளைப் போல்' - உசாத்துணைகள்!

அவை சிந்திக்கும் அல்லது செயற்படும் ஆற்றலை அதிகரிக்கின்றனவா அல்லது அபகரிக்கின்றனவா என்ற மருள் அறிவாளிகளையே மருட்டுகின்றது.

அன்று பரீட்சைத் திடலில் குதிரைகள் ஓடின!

இன்று போட்டிக் களங்களில் கூகைகள் பறக்கின்றன!

அதென்ன கூகைகள் என்ற சொலவடை?

அது கூகிளின் கையர்கள் என்பதன் குறியீடு! அல்லது கூகிளை கையாடுபவர்கள் என்பதன் இடுகுறி!

வாழ்க்கையில் எல்லாமே சுலபமாகக் கிடைப்பின் சுவாரசியம் இருக்காது.போராடி கிடைக்கிற வெற்றிக்குத்தான் மகிழ்ச்சியும் மதிப்பும் அதிகம்!

கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் காலகாலமாக பல போட்டி நிகழ்ச்சிகளை போட்டி போட்டு வழங்கி வருகின்றது.

அவை ஒவ்வொன்றிலும் சாமர்த்தியத்துடன் மோதும் தனித்துவமும் இருக்கும்! ஒன்றுக்கொன்று சவாலில் வேறுபாடு காட்டும் சமயோசிதமும் இருக்கும்!

ராணுவத்துக்கு ஆளெடுக்கும் தளமுமல்ல! எவரையும் ரணப்படுத்தும் களமுமல்ல! என உள்வாங்கும் நேயர்களிடம்

*பழக்கமில்லாப் பாவையர் சிந்தும் பாதிப் புன்னகை தந்திடும் பரவசமும் இருக்கும். பரபரப்பும் இருக்கும்.*

*1996 ம் ஆண்டு போட்டி நிகழ்ச்சித் தயாரிப்பாளன் என்ற தகுதியை கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் எனக்கு தந்தது.*

*உற்சாக ரத்தத்தை ஊற வைத்து மூளையை சுறுசுறுப்பாக்கி சூடேற்றும் சூழலை எனக்கு உருவாக்கியதில் விசிலடித்தது மனது!*

*உலகின் முதலாவது 24 மணி நேர தமிழ் வானொலியாக கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தை நிறுவிய அளப்பரிய ஆற்றல் மிக்க இளையபாரதியுடன் ஏற்பட்ட பழக்கம் பிடித்ததை செய்து கொண்டு அதில் மகிழ்ச்சியைத் தேடும் ஒரு சாமானியனான எனக்கு ஏற்றம் தந்த வரப்பிரசாதமாக அமைந்தது.*

*குட்டிக் குட்டிக் கதைகளுடன் குறுக்கெழுத்துப் போட்டி உலகின் முதலாவது மிகச் சிறிய குறுக்கெழுத்துப் போட்டியாக கலசம் சங்கத் தமிழுடன் தங்கத் தமிழ் பஞ்சாலாத்தி போன்ற போட்டிகள் தொடராகவும் சர்வதேச தினங்களையொட்டிய முப்பத்து நான்கு போட்டிகள் தனித்தனியாகவும் எனக்கு அத்திவாரம் போலாகிட பாஞ்சாலன் சரமாவதி பத்மவியுகன் பொன்னம்மா தங்கப்பன் பூவாத்தா போன்ற பெயர்கள் அச்சவாரமாகி மறக்க முடியாத பாகங்களில் பதிவாகின.*

கடிகாரம் துரத்தும் காலத்தின் வேகத்தில் நின்று நிதானித்து சாவகாசமாகத் திரும்பிப் பார்த்தால்

- அட! அதற்குள் இருபத்தைந்து ஆண்டுகள் சூழலின் சுழலில் பறந்தோடி விட்டன!

தமிழ் அறிஞர் சொற்செம்மல் சாயிப்பிரியன் திரு.க.துளசிகாமணி அவர்கள் அணிந்துரை தந்து நூலுக்கும் எனக்கும் அணி சேர்த்துள்ளார். மூத்த தமிழின் மூலகங்களுடன் உறவாடுபவர் அவர். பக்திக்குரியவர்.

உழைக்காதவன் கையில் தங்கமும் அழுக்கு. உழைப்பவன் கையில் அழுக்கும் தங்கம் என்பதற்கு நல்ல உதாரணமாகி எந்த நிகழ்ச்சியையும் உரிய முறையில் மெருகேற்றி உன்னத முறையில் சோபிக்க வைக்கும் உத்தம கலைஞர் இளையபாரதி திரு.கந்தையா சிவசோதி. இங்கு வாழ்த்துரையையே வாழ்த்தும் உரையாக்கி உள்ளார்.

அறிமுகவுரை தந்தவர் வானலை மன்றத்தின் தலைவி திருமதி கமலா சந்திரன். மனித நேயம் மிகுந்தவர். காரும் கணனியும் இல்லாவிட்டால் என்ன? இருந்த இடத்தில் இருந்தவாறே உலகை உருட்டி எடுக்கும் மனித மாயம் மிக்கவர்!

எனது மகன்மார் தீபனும் வதனனும் முகக்கவசம் போலத் தேவையறிந்து கணனியின் 'முன் களப்பணியில்' உதவினர்!

வாசிக்கும் உங்களை விடுவேனா?

புன்னகைப் பூச்செண்டுடன் அனைவருக்கும் நன்றி!

எழுதுவதற்கு ஆவலுடன் நான் - பதிலளிக்கும் ஆர்வத்துடன் கமலா சந்திரன் - விமர்சிக்கும் ஆற்றலுடன் சாயிப்பிரியன் - வித்தக ஆசயத்துடன் இளையபாரதி என்ற கூட்டாளிகளின் கூட்டணி அன்றைய போட்டியில் அன்றும் - அதே பெயருடன் இன்றும் - கலந்துகொள்வது உள்ளுக்குள் இனம் புரியாத கிளர்ச்சியைத் தருகின்றது.

1996 ம் ஆண்டுக்கும் 2010 ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பல வாரங்கள் பல மாதங்கள் பல பருவங்கள் வானலையில் வந்ததாக 'நான் நம்பும்' எனது போட்டி நிகழ்ச்சிகள் அனைத்தையும் நூலாக்கி ஆவணப் படுத்தும் ஓர் 'உந்துதல்' ஆழ் மனத்தில் எழுந்தது.

'எங்கிருந்தாலும் உடனடியாக வரவும்' என எதிர்காலத்தவர்கள் என்னைத் தேடாதிருக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளே கை விட்டு இருதயத்தை வெளியே எடுத்ததில் -

எனது பணி ஓய்வு நேரம் - ஓயாத பணி நேரமாயிற்று!

மிகவும் எளிமையான சாதாரணமான தனித்தனிப் போட்டிகள் பத்திலிருந்து 550 கேள்விகளை அகத்தில் நம்பிக்கையுடன் முதலில் இங்கு தொகுத்துள்ளேன்.

ஏனையவும் முகத்தில் புன்னகையுன் வருவதற்காக என்னைத் துரத்தும் என்ற கற்பனையுடன்.

அந்தக் காலத்தில் கனடாவிற்குள் புதிதாக வந்தவர்களை பெரிதும் கவர்ந்த கைமருந்துகள் நட்சத்திர அமைவிடங்கள் என்பன கடந்த கால விருப்பைக்கண்டு அறிய வைக்கும்.

சங்ககால கடைச்சரக்குகள் பெயர் பெற்ற பெண்கள் என்பன வயசான வார்த்தைகளின் வளத்தை சிந்திக்கத் தெரிந்தவர்களின் சிந்தையில் நிரப்பும்.

இந்த இரு பகுதிகளையும் மூலக் கேள்விகளில் ஆலாபனை செய்தது போன்றில்லாமல் அவற்றின் வீரியம் கருதி 'என்றால் என்ன' என்பதுடன் மட்டும் மட்டுப்படுத்தியுள்ளேன்.

மற்றும் படி 'பூக்கள் பறவைகள் விலங்குகள் இசைக்கருவிகள் நாணயங்கள் உணவு' ஆகியவை இதற்கு இதுவல்ல வயது என்ற உணர்வை உங்களுக்குத் தராது.

பொது அறிவுக் கேள்விகள் உள்ளாடைகள் மாதிரி இறுக்கமாகவும் ரகசியமாகவும் இருக்கக் கூடாது என்பதால் ஒவ்வொரு கேள்வியும் நான்கு பதில்களுடன் உங்கள் பருந்துப் பார்வைக்காக காத்துள்ளன.

அவற்றினுள் சரியானது ஒன்றை பாதிப் பார்வையுடனாவது கிரகிப்பதற்கும் ஈற்றில் உள்ள விடைகளுடன் ஒப்பு நோக்குவற்கும் ஆர்வம் இருந்தால் அலுப்பு இராது. அலுப்பு இருந்தால் ஆர்வம் இராது.

அறிவித்தல் கற்பித்தல் மகிழ்வுட்டல் என்பனவற்றுள் ஏதாவது ஒன்றோ அல்லது எல்லாமுமோ அன்று தொட்டு

இன்று வரை உள்ள கேள்வி - பதில் நிகழ்ச்சிகளுக்கு அடிப்படை ஆதாரம்.

கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன நேயர்களின் இயல்பான பதிலளிக்கும் ஆற்றலுடன் போட்டி போடுவதற்கு - தனித்திறன் அவசியம்.

அதில் எந்தவொரு போட்டித் தயாரிப்பாளரும் சோடை போனதில்லை!

உங்களைப் புரிந்தவர்களுக்கு மட்டும் நல்ல புத்தகமாக இருந்தால் போதும்.

புரியாதவர்களுக்குப் புதிராகவே இருந்துவிடுங்கள்!

அன்றைய போட்டி கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க வைக்கும் ஆவணமா? அல்லது கடக்க வேண்டிய பாதையை நினைக்க வைக்கும் ஆதனமா? இளமையின் திரும்பலா? வெற்றியின் நீட்சியா?

நீங்களே சொல்லுங்கள்!

- அழகென்பது மனதுதானே!

கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துடனான 25 வருட நிறைவில் மனம் பல வாங்கிய நினைவில் 2021ம் ஆண்டு கனடா விக்டோரியா தினத்தில் (24.05.2021) இந் நூலை வெளியிடுவதில் மகிழ்கின்றேன்!




1. பூக்கள். ..........................................1
2. பறவைகள்..........................................9
3. விலங்குகள் ......................................17
4. இசைக்கருவிகள் ...............................27
5. நாணயங்கள்......................................37
6. உணவு ...........................................45
7. கைமருந்துகள். ..................................55
8. அதில கொஞ்சம் இதில கொஞ்சம். ....63
9. பெயர் பெற்ற பெண்கள் .....................73
10. சங்க காலகடைச்சரக்குகள் ...............79




# 1.பூக்கள்!

1.பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒல்லாந்தில் தங்கத்திலும் கூடுதலான பெறுமதி எந்தப்பூவிற்கு இருந்தது?

அ.தாமரை ஆ.மல்லிகை இ.ரோஜா ஈ.டுலிப் மலர்

2. அந்தி மந்தாரை இலங்கையில் வேறு எந்தப் பெயரில் பிரசித்தம்?

அ.நான்கு மணிப்பூ ஆ.முல்லை இ.அலரி ஈ.அரளி

3.கனடாவில் கியுபெக் மாநில பூ திருமணத்தின் 25 வது ஆண்டுக்குரிய பூ வானவில் தேவதை என்றும் கருதப்படும் பூ தமிழில் என்ன பெயர் பெற்றுள்ளது?

அ.கனகாம்பரம் ஆ.பன்னீர்பூ இ.கருவிழிப்பூ ஈ.சம்பங்கி

4.வேப்பம் பூவை மென்ற வௌவால் கசப்பு நீங்க எந்தப்பூவில் வாய் வைக்கும்?

அ.மிளகாய் ஆ. இலுப்பை இ.பூவரசு ஈ.ஊமத்தை

5.மின்னல் ஒளியால் மலர்வதும் மலர்ந்த பின் பல மின்மினிப் பூச்சிகளை மலர்த்துவதும் எந்தப் பூ?

அ.மகிழம்பூ ஆ.தாழை இ.புங்கை ஈ.பாதிரி பூ

6.போர்க்களத்தில் வேப்பம்பூ பாண்டியரையும் ஆத்திப்பூ சோழரையும் அடையாளமிடுமெனின் சேரரை?
அ.கூவிளம் ஆ.நொச்சி இ.கொன்றை ஈ.பனை

7.போரில் வெற்றி பெறும் மன்னர் சூடும் பூ எது?
அ.வாகை ஆ.புங்கை இ.வெட்சி ஈ.ஆம்பல்

8.இராமனுக்கும் இராவணனுக்கும் இறுதியான போரை கம்பராமாயணத்தின் யுத்த காண்டம் எந்தப்பூ கொண்டு சித்தரிக்கின்றது?
அ.இருவாட்டி ஆ.தும்பை இ.பவளமல்லி ஈ.அரளி

9.ஐவகை நிலங்களும் பூக்களின் பெயரையே கொண்டுள்ளன. மணல் சார்ந்த நிலப்பூ எது?
அ.மருதம் ஆ.முல்லை இ.பாலை ஈ. குறிஞ்சி

10. கடவுள் குடியிருக்கும் பூ என்று கிராமங்களில் சொல்லப்படும் பூ எது?
அ.நாகலிங்கம் ஆ.எருவைபூஇ.தாழை ஈ.ஆவாரம்பூ

11. பழந் தமிழ் பாடல்களின் வெட்சி என்ற பூ தற்காலத்தில் எக்சோரா எனப்படினும் சிலரால் இவ்விதமும் சொல்லப்படுவதுமுண்டு.
இ.மகிழம்பூ ஆ.பூவரசு இ.அல்லி ஈ.இட்டலிப்பூ

12. தனித்துவ நிறத்துடன் என்றுமே புதிதாய் பூத்தது போல் தோற்றமளிக்கும் பூ எது?
அ.தாமரைஆ.வாடா மல்லிகை இ.காகிதபூ ஈ.கேதகை

13.முகர்ந்து பார்த்தால் ஊமையாகிவிடுவார்கள் என்று முகராமலே ஊரார் பேசும் பூ எது?
அ.வகுளம்பூ ஆ.நாகப்பூ இ.ஊமத்தம்பூ ஈ.ஆம்பல்

14.இலங்கையில் பரவலாக பட்டி தொட்டி எங்கும் ஒரே நேரத்தில் தினமும் மலர்ந்த பட்ரோஸ் என்ற இயற் பெயருடைய பூ எது?
அ.பத்துமணிபூ ஆ.ரோஜா இ.செவ்வந்தி ஈ.பாலை

15.சங்க இலக்கியம் கரு விளை என்ற பூ எது?
அ.செம்பருத்தி ஆ.சங்கு பூ இ.அல்லி ஈ.கோழி பூ

16. பானைக்குள் உள்ள நீர் வாசமுற எந்தப் பூவை போடவேண்டும் என்கிறது நாலடியார்?
அ.பன்னீர்பூ ஆ.துளசி இ.மல்லிகை ஈ.ரோஜா

17.விநாயக சதுர்த்திக்கு பக்தர்கள் பக்தியுடனும் பரவசத்துடனும் சமர்ப்பிக்கும் பூ எது?
அ.நந்தியாவட்டைஆ.ஆம்பல் இ.எருக்கம்பூஈ.வாகை

18.பிரேஸிலில் உள்ள 3500 வகையான ஓர்கிட் மலர்களே அந் நாடு ஓர்கிட் மலர்களின் நாடு என அழைக்கப்படுவதற்கு காரணம். சிங்கப்பூரின் தேசிய மலருமான அதன் தமிழ் பெயர் என்ன?

அ.மந்தாரை ஆ.கனகாம்பரம் இ.மௌவல் ஈ.தாழை

19.இந்தியாவிற்கும் வியட்நாமிற்கும் பொதுவான தேசிய மலர் எது?
அ.கொன்றல் ஆ.குருந்தம்பூ இ.வெட்சி ஈ.தாமரை

20. உலகின் எந்தக் குறிச்சியில் இருந்தாலும் இந்தப்பூ 12 வருடங்களுக்கு ஒரு முறைதான் பூக்கும்.எந்தப்பூ?
அ.குறிஞ்சி ஆ.ஜாதிமல்லி இ.தாழம்பூ ஈ.மகிழம்பூ

21.அநாதியில் ஐஸ் கட்டிகள் பாவனையற்ற நிலையில் மதுவை எந்தப்பூவில் ஊற்றிக் குளிரூட்டினர்?
அ.குவளை ஆ.அல்லி இ.இலுப்பை ஈ.நெய்தல்

22.தாழம்பூவை ஓலைப்பூ என்பது போல் எது இலைப்பூ எனப்படும்?
அ.செண்பகம் ஆ.மருக்கொழுந்து இ.மந்தாரை ஈ.அரளி

23.பழமென நினைத்து எதன் பூ பலரால் விரும்பிச் சுவைக்கப்படுகின்றது?
அ.வாழை ஆ.தோடை இ.அன்னாசி ஈ.லாவலூ

24.இலையென நினைத்து எதன் பூ பலரது விருப்பமாக சமைக்கப்படுகின்றது?
அ.பூங்கோசு ஆ.கீரை இ.கோவா ஈ.முகட்டை

25.மாலையில் மலர்ந்து நள்ளிரவில் பிஞ்சாகி காலையில் காயாகிவிடும் விசித்திரப்பூ எது?
அ.மயிர்மாணிக்கம் ஆ.வாகை இ.காந்தள் ஈ.மகரந்தப்பூ

26.ஆயிரத்துக்கும் அதிகமான பூக்கள் சேர்ந்திருந்தாலும் எமது கண்களுக்கு ஒரு பூ போலவே தோற்றமளிப்பது எந்தப்பூ?
அ.கொண்டல் ஆ.சூரியகாந்தி இ.லவெண்டர் ஈ.வகுளம்பூ

27.எந்தப் பழத்தை நினைத்துக் கொண்டு முகர்ந்தாலும் அதன் வாசனை தரும் என சொல்லப்படும் பூ எது?
அ.மனோரஞ்ஜிதம் ஆ.கனகாம்பரம் இ.ஆம்பல் ஈ.மருதம்

28.தேனீக்களின் அதிர்வினால் கொத்துக் கொத்தாகக் கூத்தாடுவது போல் தோற்றமளிக்கும் பூ எது?
அ.அத்தி ஆ.வேம்பு இ.காவடிப்பூ ஈ.கத்தாளம்பூ

29.இரவின் இராணி என பரவலாகவும் பிரம்ம கமலம் நிஷாகாந்தி என பொதுவாகவும் அழைக்கப்படும் மிகுந்த வாசனையுடைய பூ இலங்கையில் வேறு எவ்விதம் அழைக்கப்படும்?
அ.சொர்க்கத்தின் பூ ஆ.மணப்பூ இ.மூக்குபூ ஈ.தாழை

30. சிவப்பு மஞ்சள் நாவல் வெள்ளை ரோஸ் ஆகிய நிறங்களில் உள்ள எந்தப் பூ முறையே காதல் நட்பு ஆன்மீகம் துயர் நன்றி ஆகிய உணர்வுகளை முதலில் தோற்றுவிக்கும் என்ற கருத்து உண்டு.
அ.செவ்வரத்தை ஆ.செவ்வந்தி இ.ரோஜா ஈ.லில்லி

31.தூங்கா நகரத்தின் நறுமணம் கமழும் பூ இது. பிலிப்பையின்ஸ் நாட்டின் தேசிய பூவும் இது.
அ.அனிச்சம் ஆ.தேமா இ.மல்லிகை ஈ.காசிதும்பை

32. முகர்ந்தாலே வாடி விடும் பூவிலும் காதலி மென்மையானவள் என குறள் கூறும் பூ எது?
அ.முல்லை ஆ.அனிச்சம் இ.துளசி ஈ.குமுதம்

33.அலரி அல்லது தேமாவை வேறு எவ்விதம் சொல்வர்?
அ.தேக்கு ஆ.கொண்டல் இ.வாகை ஈ.பாதிரி

34..இலங்கையின் சில மாகாணங்களில் கடுகு நாவல் அல்லது பீநாறி இந்தியாவில் பல மாநிலங்களில் எது?
அ.உன்னிப்பூ ஆ.சிறுபூளை இ.கைதை ஈ.பலாசம்

35..இலங்கையில் பவளமல்லி இந்தியாவில்?
அ.பாரிஜாதம் ஆ.அசோகா இ.ஆரம்பூ ஈ.செம்மல்பூ

36.இலங்கையின் தேசியப்பூ எது?
அ.நீலோற்பலம் ஆ.கரந்தை இ.மராமரம் ஈ.வேரல்

37.மலர்ந்தும் மலராது விரிந்த பின்பும் கூம்பியது போலிருக்கும் பூ எது?
அ.ஆம்பல்ஆ.ஞாழல் இ.செருந்திஈ.மினகாய்செவ்வரத்தை

38.வீட்டுக்குள் வளர்க்கப்படும் பணக்காரச் செடி. கிராமங்களில் ஓர் பூவை கேட்டுப் பாருங்கள். ஏதோ அவர்கள் வீட்டில் பெண் கேட்டதாக முறைப்பார்கள்.
அ.அந்தூரியம் ஆ.ருலிப் இ.லவெண்டர் ஈ.மணிவாழை

39.தங்க புஷ்பம் சீன ரோஜா சப்பாத்துப்பூ ஜபம் செம்பரத்தை போன்ற பெயர்களும் உள்ள மலேஷியா தேசிய மலர் எது?
அ.நரத்தம் ஆ.தோன்றிப்பூ இ.சங்கைபூ ஈ.செவ்வரத்தை

40.பிழிவாதப்பூ என்ற காரணப் பெயர் உள்ள பூ எது?
அ.பகன்றைபூஆ.தூங்குசெவ்வரத்தைஇ.தில்லைஈகள்ளி

41.தமிழீழ தேசிய பூ என விரிந்த கார்த்திகை பூவின் பாரம்பரிய தமிழ்ப் பெயர் எது?
அ.திலகம் ஆ.காந்தள் இ.வடவனம் ஈ.வாகை

42.இலங்கையில் தீவிர இடதுசாரி கட்சிகளுக்கு முன்னோடியான இயக்கம் எந்தப் பூவின் பெயரை தனதாக்கியிருந்தது?
அ.ஆல் ஆ.கிழுவை இ.செந்தாமரை ஈ.பூவரசு

43.முதலாம் உலக மகா யுத்தம் முடிவுற யுத்த களத்தில் ஏராளமாக பூத்து நீத்தாரை இன்று வரை நினைவு கூரும் பாப்பி மலரின் தமிழ் என்ன?
அ.நிஷகாந்தி ஆ.வெடிபலவன் இ.கசகசா ஈ.கடுதாசிபூ

44.மார்கழி மாதம் நீக்கமற நிறைந்திருக்கும் இலையை பூ என கருதும் நத்தார் பூவின் நிஜப் பெயர் என்ன?
அ.பொயின்செத்தியா ஆ.டூலிப்இ.லவெண்டர்ஈ.ரோஜா

45.சில நாடுகளில் தந்தையர் தின விசேட அன்பளிப்பாகும் நமது வீட்டுத்தோட்டப் பூ எது?
அ.செவ்வந்தி ஆ.மணிவாழை இ.லில்லி ஈ.அரளி

46.கடல் ஆய்வாளரான போகன்விலா சாதாரண வீட்டுத் தோட்டங்களில் எப்படி உள்ளார்?
அ.ரோஜா ஆ.செவ்வந்தி இ.செவ்வரத்தை ஈ.கடுதாசி பூ

47.ஜப்பானில் எந்தப் பூ பூக்கும் தினம் தேசிய விடுமுறை தினமாகும்? உலகின் மிக அழகான பூவாக கருதப்படும் இப் பூ ஜப்பானின் தேசிய மலருமாகும்.
அ.ஐரிஸ் ஆ.டெய்ஸி இ.சகுரா ஈ.கார்னேஷன்ஸ்

48.உலகின் மிகச் சிறிய பூ எது?
அ.மூக்குத்திபூ ஆ.வர்த்தகப் பூ இ.கடுகுபூ ஈ.இலந்தைபூ

49. உலகின் மிகப் பெரிய பூ எது?
அ.சூரியகாந்தி ஆ.தாமரை இ.மணிவாழை ஈ.ரபிளீசியா

50. கோட்டுப் பூ: அலரி போன்று மரமாகிப் பூப்பவை
கொடிப் பூ: மல்லிகை போன்று கொடிகளில் மலர்பவை
நீர்ப் பூ: அல்லி போன்று நீர்நிலைகளில் அலர்பவை
நால்வகை பூக்களில் அடுத்ததான நிலத்தில் படரும் நிலப் பூவிற்கு எது உதாரணம்?
அ.செங்காந்தள் ஆ.நந்தியாவட்டை இ.ரோஜா ஈ.வாகை

**விடைகள்:**

1.ஈ 2.அ 3.இ 4.ஆ 5.ஆ 6.ஈ 7.அ 8.ஆ 9.இ10.அ
11.ஈ 12.ஆ 13.இ 14.அ 15.ஆ 16.ஆ 17.இ 18..அ
19.ஈ 20.அ 21.அ 22.ஆ 23.இ 24.அ 25.ஆ 26.ஆ
27.அ 28.இ 29.அ 30 இ 31இ 32.இ 33.ஈ 34.அ
35.அ 36.அ 37.ஈ 38.அ 39.ஈ 40.ஆ 41.ஆ 42.ஈ
43.இ 44.அ 45.ஆ 46.ஈ 47.இ 48.ஆ 49.ஈ 50.அ

# 2.பறவைகள்!

1.அனைவருக்கும் அபயமளிக்கும் அய்யப்பனின் கையில் உள்ள கொடிப் பறவை எது?
அ.கோழி ஆ.மயில் இ.காகம் ஈ. கிளி

2. அந்தக் காலத்தில் ஒரு சிலரை கண்டதும் கன்னத்தில் போட வைத்த பறவை எது?
அ. புலுணி ஆ.மைனா இ.கருடன் ஈ. வல்லூறு

3.தமிழில் 'வாயுள்ள' ஒரே ஒரு பறவை எது?
அ.கொக்குஆ.நாகணவாய் இ.வாத்து ஈ.கல்குருவி

4. ஆழமாகச் சுழியோடும் ஆற்றல் பெற்ற – பிரபல ஆங்கில நூல் பிரசுர நிறுவனத்துக்குப் பெயர் கொடுத்த பறவை எது?
அ.குயில் ஆ.பென்குயின் இ.நாரை ஈ.நத்து

5. 'தானும் அதுவாக' பாவிக்கும் பறவை எது?
அ.பொன்குருவி ஆ.அன்னம்இ.வான்கோழி ஈ.கழுகு

6.உலகில் அதிவேகமாக பறக்கும் பறவை எது? 105மைல் வேகத்தில் சாதாரணமாகவும் இரையை கவ்வுவதற்காக 242 மைல் வேகத்திலும் பறக்க வல்லது.
அ.ராஜாளிஆ.கொண்டலாத்தி இ.கருடன் ஈ. வல்லூறு

7.ஆகப் பெரிய கண்களை உடைய பறவை எது? இதன் கால்கள் சிங்கத்தைக் கொல்லும் வலு உள்ளவை
அ.தீக்கோழி ஆ.மயில் இ.காடை ஈ.அன்றில்

8.எந்நேரமும் எறும்புகள் தம்மை 'மொய்ப்பதை' விரும்பும் பறவை எது? மேற்றிராணியார் என்ற பெயரும் இப் பறவைக்கு உண்டு.
அ.செங்குருவி ஆ சிட்டு இ குருகு ஈ பூங்குருவி

9.ஒற்றைக் கண் திறந்திருந்தாலும் தூங்கக் கூடிய பறவை எது?
அ.கேலிப்பறவை.ஆ. தீக்கோழி இ.புறா ஈ.தாரா

10.கௌரவ பாலூட்டிகள் என அழைக்கப்படும் கண் கெட்ட பறவை எது?
அ.நண்டு தின்னி ஆ. பருந்து இ.மாடப்புறா ஈ.கிவி

11.கண்களை அசைக்க இயலாத பறவை எது?
அ.கரிச்சான்ஆ.ஆலாஇ.ஆந்தைஈ.விரால் அடிப்பான்

12.முதன் முதலாக மனித குலம் வீட்டில் வளர்க்க ஆரம்பித்த பறவை எது?
அ.வாத்து ஆ.கிளி இ.மைனா ஈ.காதல்பறவை

13.அநாதியில் ஒலிம்பிக் முடிவுகளை அறிவிக்கப் பயன் பட்ட பறவை எது?

அ.சேவல் ஆ.பருந்து இ.புறா ஈ.கொக்கு

14.தலை தாழ்ந்திருந்தால் உணவை உட்கொள்ள முடியாத பறவை எது?

அ.நாரை ஆ.கீச்சான் இ.உள்ளான் ஈ.காகம்

15.பல குரல் மன்னன் என அழைக்கப்படும் பறவை எது?

அ.கேலிப்பறவை.ஆ.காடைஇ.குயில் ஈ.கும்பலகன்

16.குகை மூலம் இரை தேடும் அவுஸ்திரேலிய பறவை எது?

அ.கவுதாரி ஆ.அபானன்பறவைஇ.கழுகு ஈ.கரிச்சான்

17. எந்தப் பறவையின் ஒலி உலகின் எந்தப் பகுதியிலும் எதிரொலிக்க மாட்டாது?

அ.மயில் ஆ.குயில் இ.வானம் பாடி ஈ.வாத்து

18.பாலைவனங்களில் நிலத்தடி நீரை காட்டும் வல்லமையுள்ள இஸ்ரேலின் தேசியபறவை எது?

அ.ஆலா ஆ.கொண்டலாத்தி இ.நாரை ஈ.பஞ்சுருட்டி

19.வேப்ப மரமிருந்தால் இந்தப் பறவையும் இருப்பது நிச்சயம்.

அ.நத்து ஆ.புறா இ.மரங்கொத்தி ஈ.குழைக்கிடா

20. நீருள் நீந்தும் மீன்களில் ஒன்றை மட்டும் சுழியோடிப் பிடித்து மரம் திரும்பும் பறவை எது?

அ.வாத்து ஆ.மீன் கொத்தி இ.நீர்க்காகம் ஈ.வால்பக்கி

21.குறுகிய உலங்கு வானூர்தி போல பறக்கும் போது தோற்றமளிக்கும் கேரளமாநில பறவை எது?

அ.கழுகு ஆ.கருடன் இ.இருவாயன் ஈ.ஆண்டி வாத்து

22. அதிகமாக 'அடிபடும்' பறவை எது?

அ.சேவல் ஆ.சோளக்குருவி இ.கடல்ஆளி ஈ.உவணம்

23. பிரிந்தால் - பிரியும் பறவை இதுவென பல பாடல்கள் காட்டுகின்றன.எது?

அ.கிளி ஆ.அன்றில் இ.சிரிப்பான் ஈ.பொரி உள்ளான்

24.எந்தப் பறவை திரும்பிப் பார்த்தால் தமிழ்ப் பெண்ணுக்கு பெயர் வைக்கும்?

அ.தைலாங்குருவி ஆ.மயில் இ.டோடோ ஈ.தாரா

25. மிகவும் கீழ்த்தரமான பறவை அல்லது காவாலிப் பறவை என்ற அர்த்தம் பெயரில் உள்ள பறவை எது?

அ.ஈப்பிடிப்பான் ஆ.காகம் இ.காடை ஈ.வாலாட்டி

26.அகிலத்தில் அழகற்ற பறவை தமிழீழ தேசிய பறவையானதில் அழகு பெற்ற பறவை எது?

அ.செண்பகம் ஆ.அண்டங்காக்கை இ.கிவி ஈ.கூகை

27.இது ஒரு வருத்தக்கார இரவுப் பறவை?
அ.ஆட்காட்டி ஆ.வான்கோழி இ.அசுணம் ஈ. கூகை

28. நன்கு பரிச்சயமான பறவை ஹிந்தி மொழிப் பெயருடன் பரிச்சயமாக உள்ளதுதான் விசித்திரம்
அ.சிட்டு ஆ.மைனா இ.டோடோ ஈ.கினிகோழி

29.கனடாவில் ஒரு டொலர் மதிப்புள்ள ஒன்டாரியோ மாநிலப் பறவை எது?
அ.புறா ஆ.ஆந்தை இ.கழுகு ஈ.லூனி

30.சிவனிடம் பெற்ற சந்திரகாசம் என்னும் வாளால் சிறகொடிந்த பறவை எது?
அ.நாரை ஆ.ஜடாயு இ.சக்கரவாகம் ஈ.கிளி

31.மயில் கோழி வல்லூறு ஆந்தை இவற்றுடன் எது சேரின் சோதிடத்தில் பஞ்ச பட்சி ஆகும்?
அ.கருடன் ஆ.செண்பகம் இ.காகம் ஈ.கிளி

32.ஆந்தையை விடவும் பெரிய கண்களையுடைய அதே வர்க்கப் பறவை எது?
அ.நத்து ஆ.கூகை இ.கோட்டான் ஈ.ஆட்காட்டி

33.அந்தரத்தில் பறந்தபடியே பூவில் தேன் எடுக்கும் உலகின் மிகச்சிறிய பறவை எது?
அ.ஒசனிச்சிட்டு ஆ.வாணம்பாடி இ.புறா ஈ.அசுணம்

34.வாரிசை வளர்க்க மாற்றான் தாய் வைக்கும் வசதி உள்ள பறவை எது?
அ.கேலிப்பறவைஆ.குயில் இ.ஒசனிச்சிட்டு ஈ.கிவி

35. தெருவோரத்தில் உழைத்துப் பிழைக்கும் பழக்கப்பட்ட பறவை எது?
அ.காடை ஆ.காகம் இ. கிளி ஈ. சிட்டுக்குருவி

36. வேட்டைக் காரருக்கும் திருடருக்கும் பிடிக்காத பறவை எது?
அ.நத்து ஆ.கவுதாரி இ.காகம் ஈ.ஆட்காட்டி

37.சங்கீதம்தான் சாப்பாடு என்று கூறப்பட்ட புராணப் பறவை எது?
அ.நாரை ஆ.அசுணம் இ.வானம்பாடி.ஈ.குயில்

38.துல்லிய நீர்ப் பரப்பில் துறவி போல் நின்று தன் மெல்லிய உடலை மேற் பரப்பில் பிரதியாக்கி தண்ணீரில் தவம் செய்வது போல் தன் பாவனையால் பரவசம் தரும் பறவை எது?
அ.ஆலா ஆ.மீன் கொத்தி இ.கொக்கு ஈ.வாத்து

39.மஞ்சள் காமாலை நோய் எப் பறவையைப் பார்த்தால் விரைவாக நீங்கும் என்பர் பாமரர்
அ.மஞ்சள் குயில் ஆ.கழுகு இ.புலூாணி ஈ.நாரை

40. வட துருவத்திலிருந்து தென் துருவத்துக்கு 12000 மைல்கள் இடம் பெயரும் பறவை எது?

அ.ஆலா ஆ.வல்லூறு இ.கழுகு ஈ.விரால்அடிப்பான்

41.கிராமங்களில் மாடுகள் மீது பொதுவாகக் காணப்படும் கரிச்சான் குருவி வேறு எவ்விதம் குறிப்பிடப்படும்?
அ.வலியான் ஆ.குக்குறுபாச்சான் இ.புறா ஈ.காகம்

42.சீனரின் பிரியமான வளர்ப்புப் பறவை எது? நிலவை தாலாட்டும் பறவை இது என்கிறது ஆங்கில பழமொழி.
அ.மீன் கொத்தி ஆ.நாரை இ.வானம்பாடி ஈ.கிளி

43.மேக நீர் உண்டு வானில் சிறகடிக்கும் பறவை எது?
அ.சக்கரவாகம் ஆ.மரங்கொத்தி இ.சாதகபறவை ஈ.புறா

44. அந்தக் காலத்தில் காமத்தைத் தூண்டும் என்று அகராதி குறிக்கும் பறவை எது?
அ.சக்கரவாகம் ஆ.காதல்பறவை இ.ஆலா ஈ.நாரை

45.வாலாட்டி என பரவலாக குறிப்பிடப்படும் பறவையை கிராமியர் எப்படிச் சொல்வர்?
அ.ரெட்டைவால்குருவி ஆ.வாத்து இ.பூத்தாட்டிஈ.கூகை

46.இலங்கையின் தேசியப் பறவை எது?
அ.காட்டுக்கோழி ஆ.மயில் இ.குயில் ஈ.காகம்

47.இந்தியாவின் தேசியப் பறவை எது?
அ.காட்டுக்கோழி ஆ.மயில் இ.குயில் ஈ.காகம்

48.மலேஷியாவின் தேசியப் பறவை எது?
அ.காண்டமிருக இருவாச்சி ஆ.புறா இ.கிளி ஈ.ஆலா

49. இந்தியாவில் காட்டுச் சிலம்பன் எனக் கூறும் பறவையை இலங்கையில் எவ்விதம் கூறுவர்? பொதுவாக 7 பறவைகள் ஒருமித்து திரியும்
அ.தூக்கணாங்குருவி ஆ.புலுாணி இ.கிளி ஈ.புறா

50.பெரும் பாலும் நீர் நிலைகளில் மாலையில் குளித்துவிட்டுத்தான் தன் கூடு திரும்பும் வழக்கம் உள்ள பறவை எது?
அ.சக்கரவாகம் ஆ.காதல்பறவை இ.காகம் ஈ.கிளி

விடைகள்

1.அ 2.இ 3.ஆ 4.ஆ 5.இ 6.அ 7.ஆ 8.அ 9.ஈ 10.ஈ
11.ஈ 12.இ 13.இ 14.அ 15.அ 16.ஆ 17.ஈ 18.ஆ
19.இ 20.ஆ 21.இ 22.அ 23.ஆ 24.ஈ 25.இ 26.அ
27.ஈ 28.ஆ 29.ஈ 30.ஆ 31.இ 32.இ 33.அ 34.ஆ
35.இ 36.ஈ 37.ஆ 38.இ 39.அ 40.அ 41.அ 42.இ
43.இ 44.அ 45.இ 46.அ 47.ஆ 48.அ 49.ஆ 50.இ

# 3.விலங்குகள்!

1.அதிகமாக கும்பிடும் மிருகம் எது?
அ.பசு ஆ.மான் இ. ஒட்டகம் ஈ.கீரி

2.அக்கன் எகினம் முலவை முடுவல் வங்கு சுணங்கன் ஞமலி வடி குடத்தி என்பன குறிப்பதும் லைகா என்ற பெயருடன் ரஷ்யாவிலிருந்து 1957 ல் விண்வெளிக்குச் சென்றதுமான விலங்கு எது?
அ.ஆடு ஆ.மாடு இ.நாய் ஈ.கரடி

3.கோளறு பதிகத்தில் சம்பந்தர் பெருமான் உழுவை வாள்வரி என்று குறிப்பிடும் மிருகம் எது?
அ.யானை ஆ.புலி இ. சிங்கம் ஈ.குதிரை

4.அண்மையில் (1996.08.16) அமெரிக்காவில் வனவிலங்கு காப்பகத்தில் 24 அடிகள் பள்ளத்தில் தவறி விழுந்த சிறுவனை காப்பாற்றியதால் உலகப் புகழீட்டிய அங்கிருந்த மிருகம் எது?
அ.கழுதை ஆ.புலி இ.கரடி ஈ.கொரில்லா

4. பொதுவாக 'குறுக்கால' போற மிருகம் எது? இருட்டில் மனிதன் பார்பதை விட ஆறு மடங்கு தெளிவாக பார்க்கும்.குறுகிய இடத்துள் நுழையும் போது தன் மீசை பக்கச் சுவர்களில் இடித்தால் திரும்பி விடும். முக்கியஸ்தர்களை பாதுகாப்பதும் இதே மிருகம்தான்.
அ.நரி ஆ.யானை இ. எருமை ஈ.பூனை

5.மனிதரின் கை ரேகை போலவே எந்த மிருகத்தின் வரிகளும் ஒன்றுக்கொன்று வேறு பட்டிருக்கும்?
அ.ஒட்டக சிவிங்கி ஆ. வேங்கை இ.வரிக்குதிரை ஈ.மாடு

6. நாக்கால் காது துடைக்கத் தெரிந்த 'தலை மறைவு' வாழ்க்கை தெரியாத மிருகம் எது? தன்சானியரின் பெரு விருப்பமும் இதுவே.
அ.ஒட்டகசிவிங்கி ஆ.நீர்யானைஇ.கரடி ஈ. யானை

7.எதற்கு சமயத்தில் சமயம் பிடிக்கும்? தாய் லாந்தில் தேசிய மிருகமாகவும் பிளிறும்.
அ.குரங்கு ஆ. மந்தி இ.யானை ஈ.கொரில்லா

8.எந்த மிருகத்தின் மீது ஒருவரை அமர்த்திச் சிலை வடிக்கும் பொழுது ஒரு சம்பிரதாயம் உண்டு. அதாவது அம் மிருகம் நான்கு கால்களையும் தரையில் பதித்திருந்தால் அவரக்கு இயற்கை மரணம். ஒரு முன்னங்காலைத் தூக்கிய படி எனின் அவர் காயம் பட்டு அதனால் மரணம். இரண்டு முன்னங் கால்களையும் தூக்கிக் கொண்டிருந்தால் போர்களத்தில் வீர மரணம். இனி மேல் சிலைகளைப் பார்க்கும் பொழுது இதனையும் கவனிக்க வைக்கும் அந்த மிருகம் எது?
அ.எருமை ஆ.குதிரை இ.புலி ஈ.யானை

9.என்றும் வாலாட்ட முடியாத மிருகம் எது?
அ.ஆடு ஆ.மாடு இ.வாலில்லா குரங்கு ஈ.றக்கூன்

10. வீழ்ந்து முளைக்கக் கூடிய கொம்புகளையுடைய ஒரே ஒரு மிருகம் எது?

அ.மான் ஆ.நரி இ.மாடு ஈ.சிறுத்தை

11. அநாதி மனிதனுக்கு எழுது கோல் கொடுத்து மெய் சிலிர்க்கும் மிருகம் எது?

அ.பூனை ஆ.முள்ளம்பன்றி இ.நாய் ஈ. குதிரை

12. ஓவியர்கள் பயன் படுத்தும் தூரிகைக்கு மயிர் அதிகம் கொடுப்பதும் இலங்கையிலும் கியூபாவிலும் தேசிய அந்தஸ்தில் உள்ளது எது?

அ.அணில் ஆ.ஆடு இ.கரடி ஈ.சிங்கம்

13.நாக்கால் மூக்கை மட்டுமல்ல முதுகையே தொடக் கூடியது எது?

அ.ஓநாய் ஆ.பசு இ.அணில் ஈ.பச்சோந்தி

14.நத்தார் பாப்பாவின் வாகனத்தை இழுப்பவை என்றால் உங்கள் கற்பனையில் தெரிபவை எவை?

அ.துருவகரடிஆ.கலைமான் இ.கழுதை ஈ.ஒட்டகம்

15. கொறிக்கும் வர்க்கத்தில் பெரிய கனடாவின் தேசிய மிருகம் எது?

அ.பீவர் ஆ.சிறுத்தை இ.நாய் ஈ.அணில்

16. அமெரிக்காவின் கட்டுக்கடங்காத தேசிய மிருகம் எது?

அ.காட்டெருமை ஆ.கரடி இ.சிங்கம் ஈ.கழுதை

17. 'ஜட்டி' மாட்டிக்கொண்டு ஆடிப் பிழைக்கும் ஒரே ஒரு மிருகம் எது?

அ.குதிரை ஆ.ஆடு இ.குரங்கு ஈ.நரி

18. கொந்தளம் என 'புனை' பெயரை உடையதும் மிகப் பெரிய என்ற அர்த்தத்தைக் கொண்டதும் மூக்கில் கொம்பு உள்ளது என்ற காரணப் பெயரை உடையதும் நெருப்பை நெருங்கி அணைக்கும் என்ற கற்பனையுடன் கலந்ததுமான மிருகம் எது?

அ.யானைஆ.ஒட்டகம் இ.மூஸ் ஈ.காண்டா மிருகம்

19.தனது உணவை தண்ணீரில் நன்கு கழுவிச் சுத்திகரித்த பின்போ அல்லது தண்ணீர் கிடைக்காவிடின் தனது இரு கரங்களாலும் நன்கு துடைத்த பின்போ உண்ணும் வழக்கம் உள்ளது எது?

அ.நரி ஆ.ரக்கூன் இ.பன்றி ஈ. கழுதைபுலி

20.முன்னைய காலங்களில் பொதுவாக கிராமங்களில் சொல்வதற் கெல்லாம் தலையாட்டிச் சம்பாதித்ததும் துண்டு போட்டு விரல் பிடித்தவரிடம் விலை போவதும் எது?

அ.மாடு ஆ.நாய் இ.குரங்கு ஈ.பூனை

21.எந்த மிருகம் உள்ள நாடு சிங்கப்பூர் என பெயரளவிலும் தேசிய விலங்கென அங்கீகாரமும் பெற்றிருப்பினும் அந் நாட்டில் இல்லாத அந்த மிருகம் எது?

அ. நாய் ஆ. சிங்கம் இ.பூனை ஈ. மான்

22. ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் தன் கொம்புகளை உதிர்ப்பதையும் பின் ஆறு மாதங்களில் மீண்டும் முழுமையாக வளர்த்துக் கொள்வதையும் வழமையாக கொண்டுள்ளதாக ஒரு கதை நிலவும் எல்க் எனும் மறு நாமம் உள்ள மரையின மிருகம் எது என 1996 ம் ஆண்டு வானலையிலும் பின்னர் 2021ல் நூல் வடிவம் பெற்ற வேளை 2000 வருடத்தை வரவேற்கும் முகமாக ரொரண்டோ நகர வீதிகளில் 326 சிலைகளை அப்போது நகர பிதாவாகவிருந்த மெல் லாஸ்மன் நிறுவியதை மேலதிக சேர்க்கையாகவும் இணைத்துக் கொண்ட இந்த மிருகம் எது?

அ.ஓநாய் ஆ.வரிகுதிரை இ.துருவ கரடி ஈ.மூஸ்

23. பனிப் பிரதேசங்களில் வாழும் மிருகமொன்றிக்கு அவற்றின் உரோமம் பாதுகாப்பை வழங்கும் என்பதும் இழந்தால் உயிர் துறக்கும் என்பதும் காலத்தால் திரிபுபட மான் ஒன்று அதில் சிக்கியது. கேள்வி என்னவென்றால் மானினமற்ற அந்த மிருகம் எது?

அ.புள்ளிமான் ஆ.கவரிமா இ.அரிமா ஈ.கவரிமான்

24. பனிப் பிரதேசங்களில் வாழும் மிருகமொன்றிக்கு அவற்றின் உரோமம் பாதுகாப்பை வழங்கும் என்பதும் இழந்தால் உயிர் துறக்கும் என்பதும் காலத்தால் திரிபுபட மான் ஒன்று அதில் சிக்கியது. கேள்வி என்னவென்றால் அதில் சிக்கிய மான் எது?

அ.புள்ளிமான் ஆ.கவரிமா இ. அரிமா ஈ.கவரிமான்

25. தாமரைக்குள் மறையக் கூடிய மிருகம் எது என்றால் யாரும் அடிக்கவராதீங்கப்பா! என்றாலும் எது?
அ.நீர் யானை ஆ.ஆடு இ.கீரி ஈ.மரை

26.வாசனைத் திரவியம் தயாரிக்க தன் உயிரையே கொடுப்பது எது?
அ.கஸ்தூரிமான்ஆ.பன்றி இ.செம்மறி ஈ.தேவாங்கு

27. கோள் எனின் வலிமை. கோளுடன் நாய் சேர்ந்து கோணாய் ஆகியது. அதன் பின் இத்தாலிய தேசிய விலங்காகவும் வேறு எதுவாகவும் மாறியது?
அ.மரநாய் ஆ. லாமா இ.ஓநாய் ஈ. பண்டா

28. ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறந்த வேசரி. மலை பிரதேசப் பணியில் இந்திய ராணுவத்தில் நிறையவே உள்ளதாக கூறுவார்கள்.
அ.வரிகுதிரை ஆ.லாமா இ.குதிரை ஈ.கோவேறு கழுதை

29. மகாத்மா காந்திக்கு மிகவும் பிடித்தமான பாலை வழங்கிய மிருகம் எது?
அ.பசு ஆ.ஆடு இ.ஒட்டகம் ஈ.கழுதை

30.உலகில் பெரிய வாய் இருந்தும் எனினும் பெரிய வாயாடி என பெயரெடுத்ததில்லை.எது?
அ.ஓநாய் ஆ.நீர்யானை இ.சிங்கம் ஈ.நரி

31. தொந்தரவு செய்யாததும் சதா தூங்கும் வழக்கமுள்ளதும் எப்பொழுதும் தெற்கு நோக்கி அமர்வதால் வழி காட்டும் பிராணி எனவும் ஆதி

வாசிகளால் குறிப்பிடப்பட்டது எது?
அ.லாமா ஆ. பூனை இ.தேவாங்கு ஈ.பண்டா

32. எதனுடைய முதுகெலும்பு குதிரை கழுதை மற்றும் மனிதரைப் போலவே நேரானதெனினும் பார்வைக்கு மட்டும் வளைந்து தெரியும்?
அ.யானை ஆ.ஒட்டகம் இ.ஒட்டகசிவிங்கி ஈ.கவரிமான்

33.தண்ணீரில் தன்னை ஊறப் போடும் அசமந்தமான மிருகம் எது? அ.சருகுமான் ஆ.குரங்கு இ.எருமை ஈ.றக்கூன்

34.மிஜாரு - இஜாரு – கிஜாரு என்ற பெயர்களுடன் மகாத்மா காந்திக்கு விருப்பமான ஒரு பொம்மையின் மூன்று உருவங்களும் உருவகித்த மிருகம் எது?
அ.ஆடு ஆ.மாடு இ.குரங்கு ஈ.நாய்

35. புத்த மதத்தில் பேராசையை குரங்கும் கோபத்தை புலியும் குறிக்கும் அறிவற்ற மிருகங்களாக சித்தரிக்கப் பட்டுள்ளதெனின் காதலை எந்த மிருகம் குறிக்கும்?
அ.மான் ஆ.நாய் இ. சிறுத்தை ஈ.கரடி

36. ஜேசுநாதர் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு இதில் சென்றார் என்பது சரித்திரம். யுவாங் சுவாங் இவற்றில் பன்னிரண்டினைத் தமது பொதிகளை ஏற்றப் பயன்படுத்தி யாத்திரை செய்தார் என்பது ஆராய்ச்சி.இது எந்த மிருகம்?
அ.யானை ஆ.கழுதை இ.குதிரை ஈ.மாடு

37.வந்து பார் என்று மல்லுக்கட்டும் எனினும் மூர்க்கத்தனமான பெரிய சவாலைக் கூட சாதாரண மனிதன் புத்திசாலித்தனமாகச் சமாளிப்பான் என்பதனை நிருபிக்க இந்தியாவில் அலங்கநல்லூரிலும் ஸ்பெயினில் பாம்பலோணாவிலும் சித்திரவதைப்படும் மிருகம் எது?
அ.எருது ஆ.புலி இ.செந்நாய் ஈ.கரடி

38.எப்பொழுதும் கற்பனை கவர்ச்சியானது என்பதற்கு சான்றாக சிங்க முகமும் துதிக்கையும் சேர்ந்து செய்த கலவை கொண்ட மிருகம் எது?
அ.சிங்கயானை ஆ.கொம்பன் இ.யாளி ஈ.அரிமா

39.கருவை உட்புறமும் உருவை வெளிப்புறமும் சுமந்து செல்லும் ஒரு தாவலில் 12மீ.தாண்டும் மிருகம் எது?
அ.குரங்கு ஆ.கங்காரு இ.கரடி ஈ.நரி

40. தண்ணி அடிக்காத... சரி..சரி.. தண்ணீர் குடிக்காத மரக் கரடி அல்லது குரங்குக் கரடி எது?
அ.லாமா ஆ.கோலா இ.பண்டா ஈ.தேவாங்கு

41.சுமார் 12 மணி நேரம் மூங்கில் மரத்தில் சப்பிக் கொண்டிருக்கும் சீனரின் தேசிய மிருகம் எது?
அ.பண்டா ஆ.சிறுத்தை இ.கங்காரு ஈ.கோலா

42.வேட்டையாடிய மிருகங்களை மரங்களுக்குக் கொண்டு சென்று உண்ணும் பழக்கம் உள்ள மிருகம் எது?
அ.ஓநாய் ஆ.கரடி இ. சிறுத்தை ஈ.சிறுத்தை

43.நிலவில் இருக்குத் மிருகம் என சிறுவர் நம்புவது எதை? சீனத்துச் சிறுவருக்கு

கதைகளில் கெட்டித்தனம் காட்டுவதும் அதுவே.
அ.யானி ஆ.பூனை இ.கீரி ஈ..முயல்

44. சிறுத்தைகள் வேட்டையாடிய இரையை விட்டு விட்டுத் தலை தெறிக்க ஓடுவது எந்த மிருகத்தைக் கண்டால்?
அ.சிங்கம் ஆ.கழுதைப்புலி இ.வேங்கை ஈ. ஓநாய்

45. உலக மொழிகள் அனைத்திலும் திட்டுபவர்கள் வாயிலிருந்து வெளிவரும் மிருகங்களின் வரிசையில் எந்த மிருகம் முதலிடம் வகிப்பதாக மினைக்கெட்டு ஆராய்ந்தவர்கள் கூறுவர்? பயிர்களை பாதுகாக்க தவிட்டு உருண்டைக்குள் வெடிகளை வைத்து இதனைத் தாக்கிய வீரர்களும் முன்பு எம்மிடம் இருந்தனர்
அ.நாய் ஆ.தேவாங்கு இ.பன்றி ஈ.கழுதை

46.சீல் என்ற கடற்பிராணியின் பிரதான உணவாகப் பெரிதும் பலியாவது எது?
அ.துருவகரடிஆ.திமிங்கலம் இ.மூஸ் ஈ.துருவ நரி

47.குரங்கின் குரல் எது என்றால் பதில் தெரியாவிடின் 'அளாப்பக்' கூடாது.
அ.அலப்பு ஆ.கனைப்பு இ.கீச்சிடுப்பு ஈ.தெரியாது

48.புத்திக் கூர்மையுள்ள தந்திரம் மிக்க மிருகம் என மலேஷிய மாணவர் சிறு வயது முதலே எதனை கருதுவர்?
அ.சருகு மான் ஆ. நரி இ.முயல் ஈ.சிங்கம்

49. எந்த விஷயத்தையும் தன் கொம்பால் முறியடித்து விடும் என கருதப்படுவதும் கிரேக்க லத்தீன் புராணங்களில் கூடுதலாக காணப்படுவதுமான எது ஐக்கிய ராஜ்ஜியத்தின் தேசிய மிருகமுமாகும்?

அ.மரைஆ.மாடு இ.மான் ஈ.ஒற்றை கொம்பு குதிரை

50.படிவெடுப்பு முறையில் முதன் முதலாக கடந்த மாதம் 5ம் திகதி (1996.07.05) பிறந்து உலக சாதனை படைத்த செம்மறி ஆட்டுக்குட்டிக்கு என்ன பெயர் வைத்துள்ளார்கள்?

அ.குளோனிங் ஆ.அலமேலு இ.சானி ஈ.டொலி

விடைகள்:

1.அ. 2.இ 3.ஆ 4.ஈ 5.இ 6.அ 7.இ 8.ஆ 9.இ 10.அ
11.ஆ 12.அ 13.ஈ 14.ஆ 15.அ 16.அ 17.இ 18.ஈ
19.ஆ 20.அ21.ஆ 22.ஈ 23.ஆ 24.ஈ 25.ஈ 26.அ27.இ
28.ஈ 29.ஆ 30.ஆ31.இ 32.ஆ 33.இ 34.இ 35.அ
36.ஆ 37.அ 38.இ 39.ஆ 40.ஆ41.அ 42.ஈ 43.ஈ
44.ஆ 45.இ 46.அ 47.அ 48.அ 49.ஈ 50ஈ

# 4.இசைக்கருவிகள்!

1.மேடைக் கச்சேரிகளின் பொழுது ஆரோகணத்தில் மேல் நோக்கி உயர்ந்தும் அவரோகணத்தில் கீழே பதிந்து தாழ்ந்தும் எந்த வாத்தியக் கருவி கண்களுக்கும் விருந்து வைக்கும்?
அ.நாதஸ்வரம் ஆ.வீணை இ.சாரங்கி ஈ.தாரை

2.நம்ம ஊரு வாத்தியம் எது?
அ.நமரி ஆ. புல்லாங்குழல் இ.யாழ் ஈ.எக்காளம்

3.நல்ல காலம் பிறக்குது.... நல்ல காலம் பிறக்குது.... என்ற குரலுக்கு நெருக்கமான கருவி எது?
அ.வில் ஆ.கைமணி இ. குடுகுடுப்பை ஈ.மத்தளம்

4.விவசாயியாக இல்லாவிடினும் 'வயலின்' சொந்தக்காரர் வைத்திருக்கும் இசைக் கருவி எது?
அ.அரைச்சட்டி ஆ.மண்மேளம் இ.வயலின் ஈ.நகரா

5.சங்க காலத்தில் தமிழர் வீரத்தை சங்க நாதம் செய்தது எது?
அ.செண்டா ஆ.சங்கு இ.பிடில் ஈ.கோட்டுவாத்தியம்

6.மரபோடு மரித்தோரை வழியனுப்பிய வாத்தியம் எது? பேசுவதற்கும் உதவும்.
அ.பறை ஆ. தடாரி இ.குடமுழா ஈ.நிசாளம்

7.குவத்தமாலா நாட்டின் தேசிய இசைக்கருவி எது?
அ.சைலபோன் ஆ.மகுடி இ.பம்பை ஈ.சிறுபறை

8.நரம்பு – துளை – தோல் - கனம் என இசைக்கருவிகள் நான்கு வகைப்படும் எனின் கனக் கருவிக்கு ஓர் உதாரணம் எது?
அ.தம்புரா ஆ.கிளாரினெட் இ.கஞ்சிரா ஈ.ஜலதரங்கம்

9.ராமருக்குத் தெரியாது….ராவணன் இதில் திறமை பெற்றிருந்தது…எதில்?
அ.மகுடி ஆ.வீணை இ. சங்கு ஈ.தம்பட்டம்

10.ஜெமினி இரட்டையருடன் பிரசித்தமான வாத்தியம் எது?
அ.தமுக்கு ஆ. முரசு இ.ஊதுகுழல் ஈ.மருவம்

11.உற்சாகம் மேலிட்டால் சிலர் எதனை மேடையில் தூக்கிப் போட்டு அடிப்பர்?
அ.பேரிகை ஆ.மத்தளம் இ.கடம் ஈ.பறை

*12.நாதஸ்வரக்காரர் மூச்சுவிட எடுக்கும் அவகாசத்தைத் தனதாக்கி மகிழ்பவர் வாயில் எதனை வைத்திருப்பார்?*

*அ.ஊமைக்குழல் ஆ. துந்துபி இ.சங்கு ஈ.ஏழில்*

*13.குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தைகளின் மூளை வளர்ச்சியை துரிதப்படும் என ஆராய்ச்சியாளர் கூறும் இசைக் கருவி எது? சிரித்திரன் சஞ்சிகையின் பதில்களுக்கு இக் கருவியின் பெயரிருந்தது.*

*அ.கரதாளம் ஆ.மகுடி இ.மகரவிணை ஈ.தத்தளகம்*

*14. "தலையிலடித்து" க் கொள்வோருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கும் வாத்தியம் எது? பதலை எனும் தமிழ் பெயரே மருவியதாகவும் ஒரு கதை உண்டு.*

*அ.உருமி ஆ.தபேலா இ.முழவு ஈ.கஞ்சிரா*

*15.கனடாவின் தேசிய இசைக் கருவியான பியானோவிற்கு தமிழ் என்ன?*

*அ.தகுணிச்சம்ஆ.தமருகம்இ.கின்னரப்பெட்டிஈ.தூரியம்*

*16.ராஜ வாத்தியம் என சொல்லப்படுபவை இரண்டு.ஒன்று தவில் மற்றது எது?*

*அ.மிருதங்கம் ஆ.முரசு இ.திமிலை ஈ.உடுக்கு*

17. நான்கு வகை யாழ்களில் சிகர யாழ் எது?
அ.மகரயாழ் ஆ.கொட்டுயாழ் இ.ஆகுளி ஈ.முழவு

18. சோக கீதம் தரும் ஹிந்துஸ்தானி வாத்தியம். மௌன அஞ்சலிக் கருவியோ என்று சொல்லும் வகையில் இந்தியாவில் அல்லது இலங்கையில் பிரபலங்கள் மறைந்தால் நாள் பூராவும் அழுவது எது?

அ.முருகியம்ஆ.வீணை இ.ஷெனோய் ஈ.சல்லிகை

19. மலையாள நடனங்களுக்கு வேகம் கொடுப்பது எது?
அ.உடுக்கு ஆ.பெருமுரசு இ.செண்டை ஈ.தமருகம்

20.மகாகவி பாரதியார் எந்த வாத்தியக்கருவியை எதிர்த்து கட்டுரை கூட எழுதியுள்ளார்?
அ.கொக்கறைஆ.ஹார்மோனியம்இ.திருச்சின்னம் ஈ.தம்பூரா

21.ரவிசங்கருக்கு உலகப்புகழ் ஏற்படுத்திய இசைக்கருவி எது?
அ.சித்தார் ஆ.யாழ் இ.வயலின் ஈ.புல்லாங்குழல்

22. பாடகருக்குப் பின் பக்கமாக அமர்ந்து வாயருகே கை வைத்து ‘ஞொய்...ஞொய்’ என்று ரீங்காரமிட்டுக் கொண்டிருப்பவரிடம் உள்ள கருவி எது?
அ. மவுத்ஆர்கன் ஆ.அந்தரி இ.ஒத்து ஈ.மோர்சிங்

23.முன்பொரு காலத்தில் திருவெம்பாவை பாடகர் களுடன் வீதி வலம் வந்த இசைக்கருவி எது?
அ.எக்காளம்ஆ.கஞ்சதாளம் இ.சேமக்கலம் ஈ. உடுக்கு

24.இலங்கையில் பிரபலமான கண்டிய நடனத்தின் தாள வாத்திய கருவியான மேளம் எப்படி அழைக்கப்படும்?
அ.மகிழ்பெரா ஆ.கொண்டி இ.தகுனித்தம் ஈ.எல்லரி

25. பரத நாட்டியம் பயிலுவிப்போரின் கையில் காணப்படும் சிறு கட்டை எவ்விதம் அழைக்கப்படும்?
அ.தட்டை ஆ.பதவை இ.தலைக்கோல் ஈ.சன்னை

26.மனித வாழ்க்கையில் முதன் முதல் கைக்கு வரும் வாத்தியம் இதுவாக இருக்குமோ? தொட்டில் குழந்தைகளை குதூகலித்துச் சிரிக்கவும் வைக்கும்.குட்டித் தூக்கம் போடவும் வைக்கும்.
அ.குழல் ஆ.கிலுகிலுப்பை இ.சல்லரி ஈ.சங்கு

27.சங்கீத உபன்யாசகர் கையில் காணப்படுவது.
அ.சிலம்பு ஆ.கின்னரம் இ.சப்ளாக்கட்டை ஈ.சல்லிகை

28.வாழ் நாள் பூராவும் தம்முடன் எந்த இசைக் கருவியை நாரதர் வைத்திருந்தார்?

அ.தம்பூரா ஆ.மத்தளம் இ.உடுக்கு ஈ.சலங்கை

29.அந் நாளில் போருக்கான அழைப்பையும் அறிவித்தது. போரின் வெற்றியையும் முழுங்கியது.எது?

அ.பறை ஆ.தவில் இ.உடுக்கு ஈ.பேரிகை

30.இதற்கு முன் உள்ள கேள்வி ஆங்கிலத்தில் கேட்கப்பட்டிருந்தால் வேறு பதில் கிடைத்திருக்கும். வழமையாக இரண்டு அடி நீளத்தில் இருக்கும் இக் கருவி 108 அடி நீளத்திலும் உலகில் உண்டு.

அ.குழல் ஆ.ரம்பெட் இ.கொம்பு ஈ.கொட்டு

31.அரசவை என்றாலும் கூட அசர வைக்கும் - அதிர வைக்கும் சுபாவம் உள்ள கருவி எது? இந்த மேல் நாட்டு வாத்தியக் கருவியில் தமிழ் நாட்டில் பிரபலம் சிவமணி.

அ. காளம் ஆ.ட்ரம்ஸ் இ.தடாரி ஈ.தாரை

32.வாய்க்குள் இறைவன் வைத்த வாத்தியம். சிலருக்கு சில சமயம் கரைவதுமுண்டு.

அ.முரசு ஆ.துடி இ.துந்துபி ஈ.தாளம்

33. கிராமிய இசைக்கருவி எது இளைய ராஜாவால் திரைப்படத்திற்கு எடுத்து வரப்பட்டு பிரபலமாகியது?

அ. மொந்தை ஆ.வட்டணை இ.உருமி ஈ.பறண்டை

34.ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் ஓங்கி ஒலிக்கும் குரல் கேட்டு அக் குரலை விட ஓங்கி ஒலிக்கும் கருவி எது?

அ.தவில் ஆ.எக்காளம் இ.படகம் ஈ.தக்கை

35.பழக்கப்பட்ட யானை இந்தக் கருவியை வாசிக்கும்.ஆனால் மேளம் அல்ல.

அ.தண்ணுமை ஆ.மவுத் ஆர்கன் இ.உபாங்கம் ஈ.தமுக்கு

36.தாளம் போட வைக்கும் இசைக்கருவி இதுதானா?

அ.தம்பட்டம் ஆ.நகரா இ.அடக்கம் ஈ. தாளம்

37. இது ஒன்றரையடி மெகால்ய வாத்தியம். இத்தாலியின் தேசிய இசைக் கருவியும் இதுவே. சர்வ தேச அரங்குகளில் கமுகம் - கார்வை – குழைவு போன்ற சங்கீத சமாசாரங்களுடன் புகழ் பூத்தவர் ஸ்ரீனிவாஸ்.

அ.எல்லரி ஆ. மெண்டலின் இ.பதலை ஈ. முகவீணை

38.பிறிதொரு வாத்தியக் கருவியைப் போல உருவாக்கப்பட்டு அதுவும் இல்லாமல் - எதுவும் இல்லாமல் தன் நிலை கெட்டு கேலிக்குள்ளான தமிழ் வாத்தியம் எது?

அ.கொக்கறைஆ.யாழ் இ.நையாண்டி மேளம் ஈ.கொண்டி

39 கலை வந்தவர்களைத் தலை தெறிக்க ஆட வைக்கும் வாத்தியம் எது?

அ.பம்பை ஆ. உறுமி இ.ஆகுளி ஈ.உடுக்கு

40. ராவணன்ஹதா என்ற வாத்தியம் எந்த நாட்டின் தேசிய இசைக் கருவி?

அ.இந்தியா ஆ.இலங்கை இ.மியன்மார் ஈ.நேபாளம்

41.கதிரி கோபால் நாத் இந்தக் கருவியால் நிமிர்ந்தார். ஆனால் மேலைத் தேச இசைக் கருவியான இது தோற்றத்தில் நிமிர்வதே இல்லை.எது?

அ.சக்ஸபோன் ஆ.சாரங்கி இ. முரவம் ஈ.துந்துபி

